ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2438 - 2025 මැයි 23 වැනි සිකුරාදා - 2025.05.23

2438 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, மே மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

கே. ஜீ. பிரதீப் புஷ்பகுமார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1 - B 82683 - 403 (2025/05)

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2025 இன் இல.316

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி கே. எஸ். தில்ஹானி அவர்கள், 2025, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2025, மே மாதம் 15.

05-143

---

2025 இன் இல. 317

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி பீ. எம். டீ. நிலூஷா பாலசூரிய அவர்கள், 2024, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2024, நவெம்பர் மாதம் 06.

05-202/1

---

2025 இன் இல. 318

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. எச். சீ. டி. எஸ். சில்வா அவர்கள், 2024, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2024, நவெம்பர் மாதம் 06.

05-202/2

2025 இன் இல. 319

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி ஜே. எம். எஸ். டி. ரத்நாயக்க அவர்கள், 2024, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2024, நவெம்பர் மாதம் 06.

05-202/3

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**மாத்தறை தொட்டமுண ஜயமஹா விஹாரையின் பொசொன் மஹா பெரஹர**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் நடாத்தப்படும் மாத்தறை தொட்டமுண பொசொன் மஹா பெரஹர 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி நடாத்தப்படும் என யாத்திரிகர் பிரயாணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் (175 ஆம் பந்தியின்) 1959 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 11959 ஆம் இலக்க இலங்கை அரசின் வர்த்தமாணிப் பத்திரத்தில் பிரசித்தப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

மாத்தறை பிரதேச செயலாளர் அலுவலகத்தில்,
2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22,

சுசந்த அத்தனாயக்க,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

05-126

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.